# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:158** **தேதி:-18.03.2017**

**மத்திய சங்க செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

16.03.2017 அன்று தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி ஆகியோர் 16.03.2017 அன்று கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள PGM(Estt), GM(Rectt), GM(FP), FM(BFCI) மற்றும் GM(Admn) ஆகியோரை சந்தித்து பல பிரச்சனைகளை விவாதித்துள்ளனர். எடுக்கப்பட்ட பிரச்சனைகளும், அதிகாரிகள் தரப்பில் வழங்கப்பட்ட பதில்களும் கீழே தரப்பட்டுள்ளன:-

- **நேரடி நியமன JEக்களிடம் சான்றிதழ் சரிபார்ப்பின் சமயத்தில் NOC கேட்பது:-** ஒரு சில இடங்களில் நேரடி நியமன JEக்களிடம் சான்றிதழ் சரிபார்ப்பின் சமயத்தில் NOC கேட்கின்றனர் என நமது மத்திய சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. முன்னதாக ஒரு அரசுத்துறையிலோ அல்லது அரசு நிறுவனத்திலோ வேலை பார்த்திருந்தார்கள் என்றால் மட்டுமே அந்த தோழர்கள் NOC பெற்றுத்தர வேண்டும் என்பதை திருமிகு அனிமா ராய் GM(Rectt) அவர்களிடம் நமது தலைவரகள் தெரிவித்தனர். அவரும் பொருத்தமான முறையில் அறிவுறுத்துவதாக உறுதி அளித்துள்ளார்.
- **JTO LICE தேர்வு முடிவுகள்:-** 11.12.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இதனை திருமிகு அனிமா ராய் GM(Rectt) அவர்களிடம் விசாரித்தபோது, தேர்வாளர்களின் குறைகளையும், கருத்துக்களையும் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுனர்கள் குழு முன்னரே ஒரு முறை கூடியதாகவும், ஹோலி பண்டிகையினை ஒட்டி வந்துள்ள விடுமுறை காரணமாக அந்தக் குழுவின் முடிவுகள் இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்தக் குழுவின் அறிக்கை விரைவில் இறுதி செய்யப்பட்டு இந்த மாத இறுதிக்குள் முடிவுகள் வெளியிடப்படும் என உறுதி அளித்துள்ளார்.
- **டெலிகாம் டெக்னீசியன் இலாகா தேர்வு:-** TT LDCE தேர்வு கடந்த ஆண்டு நடத்தப்படாததால் இந்த ஆண்டு கண்டிப்பாக நடத்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. இது தொடர்பாக GM(Rectt) அவர்களிடம் விவாதித்த போது TT LDCE தேர்வுகளுக்கான அட்டவனையினை தெரிவித்து மாநில தலைமை பொதுமேலாளர் அலுவலகங்களுக்கு கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து விரைவில் தகவல் தரப்படும் என ஏற்றுக் கொண்டார்.
- **அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து மாற்றல்:-** அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் பணியமர்த்தப்பட்ட நேரடி நியமன JEக்கள் சொந்த ஊருக்கு மாற்றல் கேட்டு விண்ணப்பித்து பல ஆண்டுகளாக காத்துக் கிடந்தார்கள். அவர்கள் தற்போது JTO தேர்விலும் வெற்றி பெற்ற பணி நியமனமும் பெற்று விட்டனர். மீண்டும் மாற்றல் விண்ணப்பிப்பதற்கே மேலும் 5ஆண்டு காலம் காத்துக்கிடக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த பிரச்சனையை திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். தேசிய கவுன்சிலில் நமது சங்கம் வைத்திருந்த ஆய்படு பொருளின் அடிப்படையில் இது போன்று சிரமமான இடங்களில் பணியாற்றும் இது போன்ற JTOக்கள் ஓராண்டிலேயே விண்ணப்பிக்கலாம் என நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

- **உச்சநீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் அதிகப்படியாக வழங்கப்பட்ட தொகை பிடித்தம் செய்வது நிறுத்தி வைப்பு:-** ஊழியர்களுக்கு அதிகப்படியாக வழங்கப்பட்ட பணத்தை திரும்ப பிடித்தம் செய்யக் கூடாது என்கிற உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் DoP&T வெளியிட்ட உத்தரவை BSNL நிர்வாகம் அமலாக்காததின் அடிப்படையில் இந்த பிரச்சனை தேசியக் கவுன்சிலின் விவாதத்திற்கு நமது சங்கம் முன்வைத்தது. இது தொடர்பாக திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். இது தொடர்பான நீண்ட விவாதங்களுக்கு பின் அதிகப்படியாக வழங்கப்பட்ட தொகை தொடர்பான அனைத்து பிரச்சனைகளிலும் கார்ப்பரேட் அலுவலகம் இறுதி முடிவு எடுக்கும். இது தொடர்பான அனைத்து விண்ணப்பங்களையும் மாநில அலுவலகங்கள் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்ப வழி காட்டப்பட்டுள்ளது. கார்ப்பரேட் அலுவலகம் இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த தொகையினை பிடித்தம் செய்வது நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டார். மேலும் 17.03.2017 அன்று அவருக்கு இது தொடர்பாக ஒரு கடிதத்தையும் நமது மத்திய சங்கம் எழுதி உள்ளது. மாவட்டங்களில் உள்ள இது போன்ற பிரச்சனைகளை மாவட்ட செயலாளர்கள், மாநில சங்கத்திற்கு எழுத்து பூர்வமாக எழுதி அனுப்பவும். இதனை தொகுத்து மாநில சங்கம் மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைக்கும்.
- **பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாத RM மற்றும் Gr.Dக்கள் TT தேர்வு எழுத அனுமதி:-** பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாத RM மற்றும் Gr.Dக்கள் TT LDCE தேர்வு எழுத ஒரு கட்டமாக அனுமதிக்க வேண்டும் என நமது சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. மீண்டும் இந்த பிரச்சனையை திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். நீண்ட விவாதங்களுக்கு பின் மீண்டும் இது தொடர்பாக கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ளேயே மீண்டும் பரிசீலிக்க PGM அவர்கள் ஏற்றுக் கொண்டார். நமது மத்திய சங்கமும் இந்த பிரச்சனையில் தொடர்ந்து தலையிடும்.
- **JE LICE தேர்வை உடனடியாக நடத்துக**:- JE LICE தேர்வை உடனடியாக நடத்த வேண்டும் என நமது மத்திய சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இந்த தேர்வு கடந்த ஆண்டு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். 11.12.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் வெளியான பின்னரே JE காலிப்பணியிடங்கள் நிர்ணயம் செய்ய இயலும் என அவர் தெரிவித்தார். அந்த முடிவுகள் விரைவில் வெளியாக இருப்பதால், அது வெளி வந்தவுடன் இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என அவர் உறுதி அளித்துள்ளார்.
- **வீட்டுக் கடனில் குறைந்த வட்டிக்கு மாறும் போது ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சனைகள்**:- கிட்டத்தட்ட அனைத்து வங்கிகளும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை, குறிப்பாக வீட்டுக் கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்துள்ளது. ஏற்கனவே வீட்டுக் கடன் பெற்றுள்ள BSNL ஊழியர்களும் இதில் பலனடைய வேண்டும். குறைந்த வட்டி விகிதத்திற்கு கடனை மாற்ற விரும்பும் ஊழியர்களிடம் அவ்வாறு செய்ய வேண்டும் எனில் நிலுவையில் உள்ள கடன் தொகையில் 0.5%த்தை கட்ட வேண்டும் என வங்கிகள் நிர்பந்தம் செய்கின்றன என நமது மத்திய சங்கத்திற்கு வந்த புகார்களின் அடிப்படையில் திரு Y.N.சிங் GM(T&BFCI) அவர்களிடம் இது தொடர்பாக நமது தலைவர்கள் விவாதித்தனர். இது தொடர்பாக வங்கி நிர்வாகங்களிடம் விவாதிப்பதாக GM(T&BFCI) உறுதி அளித்துள்ளார்.
- **யூனியன் வங்கியுடன் MOU புதுப்பிப்பு:-** UNION BANK OF INDIAஉடனான MOU முடிந்துள்ள சூழ்நிலையில், இதனை புதுப்பிக்க வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்தை கேட்டுக் கொண்டிருந்தது. GM(T&BFCI)உடன் 16.03.2017 அன்று விவாதிக்கும் போது UNION BANK OF INDIA

உடன் MOU புதுப்பிப்பதற்கான பணி முடிந்து விட்டதாக தெரிவித்தார். 17.03.2017 அன்று MOU கையெழுத்தாகிவிட்டது.

- **JAOதேர்வு விதிகளில் திருத்தம்**:- JAO தேர்வு விதிகளில் கீழ்கண்ட திருத்தங்களை செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுதி வந்துள்ளது.

1. எந்த ஊதிய விகிதத்தில் ஐந்து ஆண்டு சேவை முடித்திருந்தாலும் அந்த ஊழியரை தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும்.
2. JTO மற்றும் JAO ஆகிய இரண்டு கேடர்களும் ஒரே ஊதிய விகிதம் உள்ள கேடர்கள் என்பதால் JAO தேர்விற்கான உச்ச வயது JTO தேர்விற்கு உள்ளதை போல 55 என இருக்க வேண்டும்.
3. ஐந்து ஆண்டு காலம் என்பதை ஜனவரி 1ல் என்பதற்கு பதிலாக ஜூலை 1ல் என மாற்றம் செய்திட வேண்டும்.

இந்த பிரச்சனைகளை மீண்டும் திரு சுனில் குமார் GM(FP) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். இதற்காக உருவாக்கப்பட்ட கமிட்டி, BSNL ஊழியர் சங்கம் கோரியிருந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு தன் அறிக்கையினை கொடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், JAO தேர்வு விதிகளில் மாற்றங்களை நிர்வாகக்குழு மற்றும் இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார்.

- **17.07.2016 நடைபெற்ற JAO தேர்விற்கு கூடுதல் பதவிகளை உருவக்குக:-** 17.07.2016 அன்று நடைபெற்ற JAO தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, அவர்கள் பயிற்சியையும் முடித்து பணி நியமனமும் செய்யப்பட்டனர். அதற்கு பின்னர் நடைபெற்ற மறு பரிசீலனையில் மேலும் 300 தோழர்கள் வெற்றி பெற்றிருந்தனர். போதிய பதவிகள் இல்லாத காரணத்தால் தமிழகம், கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களில் ஏற்கனவே பணி நியமனம் செய்யப்பட்ட JAOக்கள் பலர் பதவிகள் இல்லாத காரணத்தால் பணி இறக்கம் செய்யப் பட்டுள்ளனர். பணி நியமனம் செய்யப்பட்ட எந்த ஒரு தோழரையும் பணி இறக்கம் செய்யாத வகையில் கூடுதல் பதவிகளை வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே கார்ப்பரேட் அலுவலகத்தில் கோரிக்கை வைத்திருந்தது. இது தொடர்பாக மீண்டும் திரு சுனில் குமார் GM(FP) அவர்களிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். அவரும் இதில் தேவையான நடவடிக்கைகள் எடுக்க உறுதி அளித்துள்ளார்.
- **சீருடைகளுக்கு பதிலாக பணம் வழங்குவது:_** 23.02.2017 அன்று நடைபெற்ற சீருடைக் குழுவின் கூட்டத்தில் சீருடைக்கு பதிலாக பணத்தை வழங்குவது என நிர்வாகத்தின் தரப்பில் ஒரு முன்மொழிவு வைக்கப்பட்டது. இது ஒரு முக்கியமான பிரச்சனை என்ற அடிப்படையில் அடுத்த மத்திய செயற்குழுவில் விவாதித்த பின்னர் தான் முடிவு செய்ய முடியும் என்று GM(Admn) அவர்களிடம் நமது தலைவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே கிளை மற்றும் மாவட்ட செயலாளர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவிக்கும் பட்சத்தில் நாம் நமது மாநில சங்கத்தின் கருத்தினை மத்திய சங்கத்திற்கு தெரியப்படுத்தலாம்.
- **பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு இலவச இரவு நேர அழைப்புகள்**:- BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கையினை அடுத்து ஓய்வூதியர்களுக்கு இந்த வசதி வழங்கப்பட்டு விட்டது. எனினும் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு இந்த வசதி இது வரை நீட்டிக்கப்படாத நிலையில் இது தொடர்பாக திரு S.K.சின்ஹா GM(Admn) அவரகளிடம் நமது தலைவர்கள் விவாதித்தனர். அப்போது இது பாரபட்சம் என்றும் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கும் இந்த வசதி கண்டிப்பாக

நீட்டிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அவரும் இதனை உரிய மட்டத்தில் விவாதிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

- **CMD BSNL உடன் FORUM தலைவர்கள் சந்திப்பு:-** FORUM தலைவர்களான தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் C.C.சிங் GS NFTE, தோழர் K.செபாஸ்டியான் GS SNEA மற்றும் தோழர் பிரகலாத்ராய் GS AIBSNLEA ஆகியோர் CMD BSNLஐ 17.03.2017 அன்று சந்தித்த போது இந்த ஆண்டு முதல் கட்டாயமாக பின்பற்ற வேண்டிய புதிய கணக்கீட்டு முறையினை தலைவர்களுக்கு விளக்கினார். ”இதுவரை இந்திய நிறுவனங்கள் GAP என்ற கணக்கீட்டு முறையினை பின்பற்றி வந்தனர். ஆனால் இந்த ஆண்டு முதல் நிறுவனங்கள் Ind AS என்ற முறையினை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. இந்த கணக்கீட்டு முறையின் படி நிறுவனங்களின் சொத்து மதிப்பை வேறு வகையில் மதிப்பீடு செய்ய வேண்டும். அதன் படி 01.10.2000க்கு பின் BSNL தனது முக்கிய வியாபாரத்தில் உருவாக்கப்பட்ட வருவாயை வைத்து வாங்கிய சொத்துக்களை மட்டுமே அதன் சொத்து மதிப்பிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அதே சமயம் புதிய கணக்கீட்டு முறையின் படி நிலம், கட்டிடங்கள் உள்ளிட்ட அனைத்து சொத்துக்களின் மதிப்புகளும் கணக்கில் வரும். இதற்காக, BSNL தனது நிலத்தின் மதிப்புகள் முழுவதையும் கணக்கில் கொண்டு வர வேண்டும். இந்த ஆண்டின் கணக்கில் கொண்டு வருவதற்கு, இந்த நிலங்களின் சந்தை மதிப்பை கணக்கீடு செய்து அதற்கு ஒப்புதல் வழங்க KPMG போன்ற ஒரு நிறுவனத்தை BSNL நியமிக்க உள்ளது. இதனால் BSNL நிலங்களின் சொத்து மதிப்பு குறைந்த பட்சம் 1,50,000 கோடி ரூபாய்கள் கணக்கில் கொண்டு வரப்படும். இந்தப் பணியினை ஜூன் 30ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும். BSNLன் 1,50,000 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கணக்கில் கொண்டு வரப்பட்டது என்றால் அது நிறுவனத்தின் மதிப்பை மக்கள் மத்தியில் பெருமளவு உயர்த்தும்.”

  இந்த பணியினை பூர்த்தி செய்ய அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை தரவேண்டும் என CMD BSNL கேட்டுக் கொண்டார். இதில் தங்களுடையை முழுமையான ஒத்துழைப்பை தருவோம் என கலந்துக் கொண்ட அனைத்து தலைவர்களும் தெரிவித்தனர். BSNLன் நில சொத்துக்கள் அனைத்தும் கணக்கிற்கு கொண்டு வருவதற்கு தலமட்டங்களில் நமது தோழர்கள் அனைத்து விதமான உதவிகளையும் செய்ய வேண்டும் என மத்திய சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

- **BSNL-MTNL இணைப்பு:-** BSNL-MTNL இணைப்பு தொடர்பாக பலவிதமான வதந்திகள் ஊழியர்கள் மத்தியில் உலா வந்துக் கொண்டுள்ளதை கணக்கில் கொண்டு CMDஐ சந்தித்த தலைவர்கள் இது பற்றி விவாதித்தனர். இது தொடர்பாக தனக்கு ஏதும் தெரியாது என அவர் தெரிவித்தார். கீழ்கண்ட நிபந்தனைகளை அரசு ஏற்றால் மட்டுமே BSNL-MTNL இணைப்பை ஏற்று கொள்வோம் என தலைவர்கள் CMD BSNLஇடம் தெளிவாக உறுதியாக தெரிவித்துள்ளனர்.
  1. MTNLன் அனைத்து கடன்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சுமையினை BSNL மீது சுமத்துக் கூடாது.
  2. BSNL மற்றும் MTNL ஊழியர்களின் ஊதியம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இதில் பாரபட்சம் ஏதும் இருக்கக் கூடாது.
  3. MTNL ஏற்கனவே பங்கு சந்தையில் பட்டியலிடப்பட்டு உள்ளது. எனவே இதே நிலையில் BSNL-MTNL இணைக்கப்பட்டது என்றால் அது BSNLன் பங்கு விற்பனை/ தனியார்மயத்திற்கு இட்டுச் செல்லும். எனவே BSNLஉடன் இணைக்கும் முன்னர் அரசாங்கம் MTNLஐ பங்கு சந்தையிலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும்.

தலைவர்களின் கருத்துக்களை உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்படும் என CMD உறுதி அளித்துள்ளார்.

- **மருத்துவக் குழுவின் கூட்டம்:-** 23.02.2017 அன்று நடைபெறுவதாக இருந்த மருத்துவக் குழு கூட்டம், GM(Admn) DOTயில் ஒரு விவாதத்தில் பங்கு பெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் நடைபெறவில்லை. மேலும் தாமதமின்றி இந்தக் கூட்டம் நடைபெற வேண்டும் என GM(Admn) திரு S.K.சின்ஹா அவர்களை நமது தலைவர்கள் கேட்டுக் கொண்ட போது அவரும் அதனை விரைவில் கூட்டுவதாக உறுதி அளித்துள்ளார்.

- **ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் CMD BSNLஉடன் சந்திப்பு:-** தோழர் P.அபிமன்யு, GS BSNLEU & VP BSNLCCWF மற்றும் தோழர் அனிமேஷ் மித்ரா SG BSNLCCWF ஆகியோர் CMD BSNL திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா அவர்களை 17.03.2017 அன்று சந்தித்து 22.02.2017 அன்று BSNL CCWF நடத்திய பேரணியின் போது அவரிடம் வழங்கப்பட்ட கோரிக்கை மனுவில் உள்ள பிரச்சனைகள் மீது விவாதம் நடத்தினர். குறைந்த பட்ச ஊதியம், EPF மற்றும் ESI உள்ளிட்ட பிரச்சனைகள் மீது BSNL கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள உத்தரவுகள் அமலாவதை CMD BSNL உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். பல மாநிலங்களில் ஒப்பந்தக்காரர் ஒரு குறைந்த தொகையை மட்டும் தொழிலாளர்களுக்கு கொடுத்துவிட்டு மீதமுள்ளதை அவர் திருடிக் கொள்கிறார் என சுட்டிக்காட்டினார்கள். மேலும் தொழிலாளர்களும், நிர்வாகமும் கொடுக்கும் EPF பணத்தையும் அவர் திருடிச் செல்வதையும் சுட்டிக்காட்டினார்கள். ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள உத்தரவுகள் அமலாவதை கண்காணிக்க ஒரு பிரிவை கார்ப்பரேட் அலுவலகத்தில் உருவாக்க வேண்டுமென தலைவர்கள் அழுத்தமாக கோரினார்கள். அதே போல அரசாங்கத்தால் கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ள புதிய ஊதியங்கள் BSNLல் உள்ள ஒப்பந்த ஊழியர்களுக்கு உடனடியாக அமலாக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். இந்த பிரச்சனைகளில் அக்கறையுடன் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக CMD BSNL உறுதி அளித்துள்ளார்.
- **01.01.2016 முதல் 20 லட்ச ரூபாய்களாக பணிக்கொடையின் உச்சபட்சம் உயர்வு:-** 7அவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பணிக்கொடையின் உச்ச பட்ச அளவு 20 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. BSNL/MTNLல் இணைக்கப்பட்ட ஊழியர்களுக்கும் 01.01.2016 முதல் இது பொருந்தும் என அரசு அறிவித்துள்ளது.
- **மத்திய அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் பாராளுமன்றத்தில் :-** மத்திய அரசு ஊழியர்கள் 16.03.2017 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது அவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி பாராளுமன்ற மேலவையில் CITUவின் பொது செயலாளர் தோழர் தபன் சென் குரல் எழுப்பினார்.

7வது ஊதியக் குழுவின் பாதகமான அம்சங்களை களையக் கோரி 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மத்திய அரசு ஊழியர்கள் 16.03.2017 அன்று பிரமாண்டமான வேலை நிறுத்தத்தை நடத்தி உள்ளனர். மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனத்தின் தலைமையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக நமது மத்திய சங்கத்தின் அறைகூவலை ஏற்று ஆதரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட BSNL ஊழியர் சங்கத்தின் அனைத்து தோழர்களுக்கும் போராட்டத்தில் பங்கேற்ற மத்திய அரசு ஊழியர்கள் அனைவருக்கும் BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**